செ.வெ.எண்: 54 நாள்:29.01.2020

**கரூர் மாவட்டம்**

**சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் 30 சதவீத மானிய உதவியுடன் புதிய தொழில் துவங்க தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பேச்சு**

**அதன் விபரம் வருமாறு:**

தமிழகத்தில் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த புதுவாழ்வுத்திட்டம் செயல்படுத்தப்படாத 120 வட்டாரங்களில் உள்ள 3,994 ஊராட்சிகளில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. அந்த வகையில், கரூர் மாவட்டத்தில் ஊரக புத்தாக்கத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், இத்திட்டம் பகுப்பாய்வு குறித்த பங்குதாரர்களுக்கு விளக்கும் வகையிலுமான கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப. அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(28.01.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தாவது:

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமானது ஊரக சமுதாயத்தில் வறுமை ஒழிப்பு என்னும் செயல்பாட்டையும் தாண்டி, தொழில் மேம்பாடு மூலம் வளத்தையும், அதன் நிலைத்த தன்மையையும் உருவாக்கி ஊரகப் பகுதிகளில் பெரும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள ஒரு சிறந்த திட்டமாகும். ஊரகத் தொழில் முனைவுகள் உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் புதிய தொழில் முனைவோரை உருவாக்க தகுதியான தனிநபர் பயனாளிகளையும், தொழில் கூட்டமைப்புகளையும் தேர்வு செய்து திட்ட பயன்கள் வழங்கப்படும். கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்ட திட்ட மேலாண்மை அலகின் கீழ் செயல்பட்டு வருகிறது. இதற்கான அலுவலகம் முசிறி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் செயல்பட்டுவருகின்றது.

இத்திட்டமானது தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படாத 120 வட்டாரங்களில் உள்ள 3,994 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் கரூர் மாவட்டத்தில் கரூர் மற்றும் குளித்தலை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 27 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

அதனடிப்படையில், கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆத்தூர் பூலாம்பாளையம், காதப்பாறை, கோம்புப்பாளையம், மண்மங்கலம், மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி, நன்னியூர், என்.புகழூர், நெரூர் தெற்கு மற்றும் வடக்கு, புஞ்சைகடம்பன்குறிச்சி, வேட்டமங்கலம் ஆகி ஊராட்சிகளிலும், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இரணியமங்கலம், இனுங்கூர், கருவாப்பாநாயக்கன்பேட்டை, குமாரமங்கலம், மணத்தட்டை, நல்லூர், பொய்யாமணி, ராஜேந்திரம், சத்தியமங்கலம், சூரியனூர், திம்பம்பட்டி, வதியம், வைகைநல்லூர் ஆகிய ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. முதற்கட்டமாக குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திலும், அடுத்தகட்டமாக கரூர் ஊராட்சி ஒன்றியத்திலும் திட்ட செயல்பாடுகள் தொடங்கப்பட உள்ளது.

கரூர் மற்றும் குளித்தலை ஊராட்சி ஒன்றியங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் புதிதாக தொழில் தொடங்க விருப்பம் உள்ள நபர்களுக்கு 30 சதவீத மானிய உதவியுடன் கடன் வழங்க இத்திட்டம் பெரிதும் உதவுகின்றது. இத்திட்டத்தின் பயன்பெறும்

பயனாளிகள் கண்டிப்பாக சுயஉதவிக்குழுக்குழு உறுப்பினராகவோ, அல்லது சுயஉதவிக்குழு உறுப்பினராக உள்ளவரின் உறவினராகவோ இருத்தல் வேண்டும்.

எனவே, சுயஉதவிக்குழுவில் உள்ள அல்லது சுயஉதவிக்குழு உறுப்பினர் உறவனராக உள்ள பெண்கள், இளைஞர்கள், ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோர், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பெண்கள் தங்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், இத்திட்டத்தில் 65 சதவீத பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும். எனவே, மகளிர்திட்டம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு மேற்கூறிய ஊராட்சிகளில் தகுதிவாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்ய ஒத்துழைப்பளிக்க வேண்டும்.

கிராமங்களின் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு கிராமப்புற பெண்களுக்கும், தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர்களுக்கும் உதவிடும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை அனைவரிடமும் ஏற்படுத்த வேண்டும். மேலும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் நபர்கள் மாவட்ட ஊரகப்புத்தாக்கத்திட்ட அலுவலரை 04326-261633, 9385299722 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக இத்திட்டம் குறித்த விளக்கக் கையேட்டினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திருமதி. ப. சுதாதேவி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் திட்ட இயக்குனர் திரு.கி.அ. சுப்பிரமணியம், வேளாண்மை இணை இயக்குநர் திருமதி.வளர்மதி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.ரவிச்சந்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.மோகன்ராம் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**